# ஸ்ரீ பாலி வளாகம் – கொழும்பு பல்கலைக்கழகம்

## வெற்றிடம்

ஸ்ரீ பாலி வளாகத்தில் வெற்றிடம் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடம் இருந்து 2025 ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தொழில்நுட்ப அதிகாரி (தகவல் தொழில்நுட்பம்) தரம் III**

**சம்பள அளவு** : U – MT1(III) - ரூபா 51,095-7X540; 10X640-60,575/- மாதாந்தம்

**ஆட்சேர்ப்பு முறை** : எழுத்துமூல பரீட்சை மற்றும்/ அல்லது நடைமுறை சோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

**02. தொழில்நுட்ப அதிகாரி (கட்புல செவிப்புல) தரம் III**

**சம்பள அளவு** : U – MT1(III) - ரூபா 51,095-7X540; 10X640-60,575/- மாதாந்தம்

**ஆட்சேர்ப்பு முறை** : எழுத்துமூலம் பரீட்சை மற்றும்/ அல்லது நடைமுறை சோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

**03. பங்களா பொறுப்பாளர் மற்றும் சமையல்காரர் (தரம் III)**

**சம்பள அளவு** : U – PL2(III) - ரூபா 44,575-16x490-52,415/- மாதாந்தம்

**ஆட்சேர்ப்பு முறை** : தொழில்முறை சோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

**04. ஓட்டுநர் (தரம் III)**

**சம்பள அளவு** : U – PL3(III) - ரூபா 48,005-16x490-55,845/- மாதாந்தம்

**ஆட்சேர்ப்பு முறை** : தொழில்முறை சோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

**05. வேலை உதவியாளர் (தரம் III)**

**சம்பள அளவு** : U – PL1(III) - ரூபா 42,775-16x450-49,975/- மாதாந்தம்

**ஆட்சேர்ப்பு முறை** : தொழில்முறை சோதனை மற்றும்/ அல்லது நேர்முகப் பரீட்சை மூலம்

**06. தச்சர் (ஒப்பந்த அடிப்படை)**

**சம்பள அளவு** : ரூபா 48,005 + ரூபா 17,800 (வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு) + ரூபா 5,000 (அரசு அங்கீகரித்த கொடுப்பனவு) + ETF+UPF

**ஒப்பந்தக் காலம்** : 01 ஆண்டு

விண்ணப்பிக்கும் நடைமுறையை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்த ஸ்ரீ பாலி வளாக இணையதளத்திற்கு பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும். (https://spc.cmb.ac.lk/) அனைத்து விண்ணப்பங்களுடனும் உள்ள கூகுள் படிவத்தை நிரப்பி சமர்ப்பித்தல் வேண்டும்.

கூகுள் படிவத்தைச் சமர்ப்பித்த பின் விண்ணப்பதாரர் மின்னஞ்சல் மூலம் கிடைக்கின்ற PDF ஆவணத்தின் வன் பிரதி ஒன்றை விண்ணப்பதாரரின் கையொப்பத்துடன் அனுப்புவது அவசியம் என்பதோடு வன் பிரதியை சமர்ப்பிக்காதது தேர்வு நடைமுறையில் தகுதி இழப்புக்கு காரணமாகும். விண்ணப்பதாரர் தற்போது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில், அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் பணியாற்றுவதாயின், நிறுவன தலைவரின் பரிந்துரையையும் விண்ணப்பத்திற்கு இணைத்தல் வேண்டும்.

அது தவிர குறித்த கல்வி, தொழில், துறை சாதாரண மற்றும் சேவை சான்றிதழ்களின் உண்மை பிரதி என உறுதி செய்த பிரதிகளும் மேல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்திற்கு இணைத்து சிரேஷ்ட உதவி பதிவாளர், ஸ்ரீ பாலி வளாகம், கொழும்பு பல்கலைக்கழகம், வேவல, ஹொரன என்ற முகவரிக்கு 2025.10.27 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். முழுமை பெறாத கைகளால் எழுதப்பட்ட தகைமை மற்றும் அனுபவத்தை உறுதி செய்வதற்கு குறித்த சான்றிதழ்களின் உண்மைப் பிரதி என உறுதி செய்த பிரதிகளை இணைக்காத மற்றும் படிவங்களின் பயன்பாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எந்த ஒரு நிலையிலும் மீண்டும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும்/ அல்லது சட்டரீதியான சபைகளின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்த நிறுவனங்களின் நிறுவன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு நிறுவன தலைவர் ஊடாக சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**சிரேஷ்ட உதவி பதிவாளர்/ ஸ்ரீ பாலி வளாகம்**
**பதிவாளர் சார்பில்**
**2025.10.10**